தினமலர்

10 செப் 2014

# மருத்துவமனை மேலாண்மை படிப்பு சங்கர நேத்ராலயாவில் அக்., 4ல் துவக்கம்

சென்னை : சங்கர நேத்ராலயா அகாடமியின், மருத்துவமனை மேலாண்மை சான்றிதழ் படிப்புக்கான வகுப்புகள், அக்., 4ம் தேதி துவங்கும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அகாடமி வெளியிட்டுள்ள அறிவிப்பு:

மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரம் சார்ந்த துறைகளில் பணியாற்றும் இளநிலை, மத்திய நிலை அலுவலர்களின் திறமைகளை மேம்படுத்தவும், குறிப்பாக, நிர்வாக சிக்கல்கள், மேலாண்மை கருத்துகளை புரிந்து கொள்ளும் வகையிலும், மருத்துவ மேலாண்மை சான்றிதழ் படிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள், அதைச் சார்ந்த துறைகளில் பணியாற்றுவோர் நலன் கருதி, சனிக்கிழமை

பிற்பகல், 2:00 மணி முதல், 5:00 மணி வரையிலான காலம், பயிற்சி காலமாக அமைத்து, 12 வாரங்கள் வகுப்புகள் நடத்தப்படும்.

சென்னை, நுங்கம்பாக்கம், சங்கர நேத்ராலயா முதன்மை வளாகத்தில், இதற்கான வகுப்புகள், அக்., 4ம் தேதி துவங்குகின்றன.

மேலும் விரவங்கள் தேவைப்படுவோர், 97104 85295 என்ற எண்ணிலும், mahali@snmail.org என்ற இணைய தளத்திலும் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, தெரிவிக்கப்பட்டுள்ளது.

http://www.dinamalar.com/news_detail.asp?id=1066487